# விண்ணைத் தொட்ட வண்ணத்துப்பூச்சிகள்!



பிராங்க்பால் ஜெயசீலன்

நெல்லை செயின்ட் ஜோசப் உயர்நிலைப் பள்ளியில் படிக்கும் மாணவ-மாணவிகள் தேசிய அளவிலும், மாநில அளவிலும் வெற்றிகளை அள்ளிக் கொண்டு சிகரத்தை நோக்கிச் சென்று கொண்டிருப்பது தமிழகத்தையே திரும்பிப் பார்க்க வைத்துள்ளது.

நல்ல உணவு இல்லை, பயிற்சி செய்வதற்கு மைதானம் இல்லை. காலணிகளும், பொருத்தமான பயிற்சி உடைகளும் கிடையாது. பூஜியத்திலிருந்து தொடங்கிய இவர்களின் சாதனை விண்ணைத் தொட்டிருக்கிறது.

திருநெல்வேலியிலிருந்து 18 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள மிகவும் பின்தங்கிய கிராமம் நாராயணம்மாள்புரம். 500 குடும்பங்கள் வசிக்கும் இந்தக் கிராமத்திலிருந்துதான் இந்த வண்ணத்துப்பூச்சிகள் சாதித்து வருகிறார்கள்.

இ.சுதா மாநில அளவில் நடந்த அத்லெடிக்கில் தங்கமும், கே.ராமலட்சுமி புனேவில் நடந்த ஜூனியர் நேஷனல் லெவல் ஓட்டப் பந்தயத்தில் தங்கமும், எம்.மஞ்சு கோவையில் மாவட்ட அளவில் நடந்த உயரம் தாண்டுதலில் வெண்கலமும், மு.சுப்புலட்சுமி மாநில அளவில் 600 மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் வெண்கலமும், நாகர்கோவிலில் 1500 மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் வெள்ளியும், கே.வேணி மாநில அளவில் 400 மீட்டர் தடை•தாண்டும் ஓட்டப் பந்தயத்தில் வெள்ளிப்பதக்கமும் பெற்றிருக்கிறார்கள்.

இந்த இளம் சாதனையாளர்களின் பெற்றோர்கள் கூலித் தொழிலாளிகள். அடுத்த நாள் பிழைப்புக்கு வழி தேடுபவர்களாக வாழ்பவர்கள்.

அப்படியென்றால் எப்படி இவர்களால் இந்த உயரத்தை எட்ட முடிந்தது?

இந்தச் சின்னஞ்சிறுசுகளை உலக அளவில் வெளிச்சம் போட்டுக் காட்டிக் கொண்டிருப்பவர் இதே ஊரைச் சேர்ந்த சுந்தரமூர்த்தி. இவர் ஒரு உடற்கல்வி ஆசிரியர். இவர் பள்ளியில் படிக்கும்பொழுது திறமையான கபடி வீரராக இருந்ததால் விளையாட்டுத் துறையில் கால் பதிக்கமுடிந்தது.

'இவர்களை இளம் சாதனையாளர்களாக உருவாக்கும் எண்ணம் எப்படி வந்தது?' அவரிடமே கேட்டோம்.

''என் கிராமத்துக் குழந்தைகளும் முன்னேற வேண்டும். இந்த வறுமையான சூழலிலிருந்து வெளிவர வேண்டும். அதற்கு எனக்குத் தெரிந்த ஒரே வழி இவர்களுக்கு விளையாட்டுப் பயிற்சி கொடுத்து உயரச் செய்ய வேண்டும் என்பதுதான். அதனால் 2006ல் முதலில் ஆறு குழந்தைகளைத் தேர்வு செய்து, அவர்களுக்கு ஆர்வம் இருக்கும் விளையாட்டுகளில் பயிற்சி தந்தேன். உள்ளூர் விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்று வென்று பரிசுகளை அள்ளி வந்ததைப் பார்த்து அவர்களது பெற்றோர்களும் மற்றவர்களும் ஆச்சர்யம் அடைந்தனர். இதனால் பத்தாவது படித்து முடித்தவுடனே திருமணம் என்ற எண்ணத்தைவிட்டு மெல்ல மெல்ல வெளியே வந்து தங்கள் பெண் குழந்தைகளைப் பயிற்சிகளில் பங்கேற்க வெளியே அனுப்பத் தொடங்கினர். அதைத் தொடர்ந்து நிறைய மாணவர்கள் ஆர்வத்துடன் விளையாட்டுகளில் பங்கேற்க முன்வர ஆரம்பித்தனர். ஆனால் பயிற்சி செய்ய எந்த வசதியும் எங்கள் ஊரில் கிடையாது. அதிகாலை நேரங்களில் சரக்கு ஏற்றிக்கொண்டு நெல்லை செல்லும் ஆட்டோக்களில் ஏற்றி பன்னிரண்டு கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள அண்ணா ஸ்டேடியத்துக்கு அழைத்துச் சென்று பயிற்சியில் ஈடுபடச் செய்வேன்.



பயிற்சியில் மாணவர்கள்

எங்கள் மாணவ - மாணவிகளுக்கு உடல்திறன் அறிந்து முறைப்படி பயிற்சி கொடுத்து அவர்களைச் சாதனையாளர்களாக உருவாக்கி வருவது பிராங்க்பால் ஜெயசீலன்தான். இவர் சர்வதேச அளவில் விளையாட்டு வீரர்களை பல வருடங்களாக உருவாக்கி வரும் சிறந்த தடகளப் பயிற்சியாளர்.

மிக எளிமையானவர்களாய், ஒரே ஊரைச் சேர்ந்த இத்தனை குழந்தைகளும், தினமும் பயிற்சிக்கு வருவது குறித்து விசாரித்து தானும், தன் நண்பர்கள் மூலமாகவும் உடை, காலணிகள், பயிற்சி உபகரணங்கள், சத்தான உணவுகள் தந்து தினமும் பயற்சியும் அளித்து வருகிறார்.



மெடல் பெற்ற மாணவர்கள்

எங்கள் ஊர் தங்கங்களை விளையாட்டுச் சிங்கங்களாக உருவாக்கி வருவது பிராங்க்பால் ஜெயசீலன் பயிற்சிதான்'' என்றார் சுந்தரமூர்த்தி நெகிழ்வுடன்.

மேலும், ''நானும் என் மனைவியும் பெரிய அளவில் செலவு செய்து மாநிலங்களுக்கு இடையே நடக்கும் போட்டிகளில் பங்கேற்க அழைத்துச் செல்ல வேண்டி இருக்கும். சில சமயம் நகைகளை அடகு வைத்துச் செலவு செய்த நாட்கள் கூட உண்டு. சிலர் இதை அறிந்து முன்வந்து உதவிசெய்வதும் உண்டு.

உடல் வலுவுள்ள விளையாட்டு வீரர்கள் மட்டுமே கலந்துகொள்ளக் கூடிய நீண்ட தூர ஓட்டப்பந்தயங்களான மாரத்தான் போட்டிகளில் கலந்துகொண்டு தங்களைவிட வயதில் மூத்தவர்களைக் கூடப் பின்தள்ளி பரிசுகளைப் பெற்று வருகிறார்கள்.

நேஷனல் அளவில் நடந்த 600 மீட்டர், 400 மீட்டர், 100 மீட்டர் ஓட்டப்பந்தயம், நீச்சல், நீளம் தாண்டுதல் போட்டிகளிலும், மாவட்ட அளவில் சென்னை, கோவை, திருவண்ணாமலை, நாகர்கோவில், திருச்சியிலும், மாநில அளவில் புனே, கேரளா ஆகிய இடங்களிலும் கலந்துகொண்டு தங்கம், வெள்ளி ஆகிய மெடல்களைக் குவித்து வருகிறார்கள்.



சுந்தரமூர்த்தி

சுதா, வேணி, மஞ்சு, சுப்புலட்சுமி, மகேஷ், ராமலட்சுமி, தங்க உதயா, எஸ்.சுப்புலட்சுமி, மீனா, சுந்தரி ஆகிய மாணவிகள் நீச்சல், தடகளம், கோ-கோ இவற்றில் தனித்திறன் வீராங்கனைகளாகத் தமிழ்நாட்டில் இருந்து தேர்வாகி, இந்திய பயிற்சி முகாம்களில் சிறப்புப் பயிற்சி பெற்று இந்தியாவுக்காக விளையாடி வருகிறார்கள். அது மாதிரியே தமிழக அரசின் விளையாட்டுத் திறன் பயிற்சி மையங்களில் பயிற்சி பெறவும் திறன் தேர்வு மூலம் தேர்வாகிச் செல்கிறார்கள்,'' என்றார்.

பள்ளி நாட்களில் அதிகாலை பயிற்சிக்குச் சென்றுவிட்டு திரும்பவும் பள்ளிக்கு வந்துவிட்டு, மறுபடியும் மாலை பயிற்சிக்கு செல்லும் இவர்களிடம் கேட்டபோது, ''எங்களுக்குக் கிடைக்கும் எல்லாப் பரிசுகளையும்விட சுந்தரமூர்த்தி சார் கிடைத்ததுதான் மிகப் பெரிய பரிசு. அவரது உதவியும், ஜெயசீலன் சாருடைய பயிற்சியும் உலகின் உயர் நிலைகளுக்கு எங்களை நிச்சயம் அழைத்துச் செல்லும்.'' என்றார்கள் கோரஸாக.

''இன்னும் மூன்று வருடங்களில் பாருங்கள். ஒட்டுமொத்த தேசமும் எங்களை வியப்புடன் திரும்பிப் பார்க்கும்,'' என்றார் சுந்தரமூர்த்தி பெருமிதமாக.